# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
(DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:- 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42-ஆம் விதி, 53-ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII-ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III-ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | S.C.NO.32/2019 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :- | அ.சா- 04( PW- 04 ) |
| பெயர் | :- | சுலோச்சனா |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :- | ராமசாமி |
| ஊர் | :- | |
| வருவாய் வட்டம் | :- | |
| சமூகம் (சாதி) | :- | |
| தொழில் | :- | |
| மதம்/சமயம் | :- | |
| வயது | :- | |

2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 13 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைகுர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் கோரிமேடு, நகர மலை அடிவாரத்தில் வசிக்கிறேன். ஏற்கனவே இளநீர் வைத்திருந்தேன். தற்போது எங்கும் வேலைசெய்யவில்லை. நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. வழக்குச் சம்பவம் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை இந்த வழக்குச் சம்மந்தமாக காவல் துறையினர் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

நான் ஏற்கனவே ஏற்காடு சாலையில் நீதிமன்றத்திற்கு எதிரில் நடைமேடையில் பழக்கடை வைத்திருந்தேன் என்றால் சரிதான். 22.02.2016 ஆம் தேதியன்று மாலை 05.30 மணிக்கு நாட்டு வெடிக்குண்டு நான் வைத்திருந்த கடைக்கு எதிரில் வெடித்ததா என்றால் அது எனக்குத் தெரிய -வில்லை. மேற்சொன்ன நேரத்தில் கடையில் இருந்ததாகவும் கிச்சிபாளையம் ஊரை சேர்ந்த செல்லதுரையும் சாணக்கியன் என்பவரும் அங்கு அழகுவேல் என்பவருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும் அவர்களை நோக்கி வந்த இருவரில் ஒருவர் இன்றுடன் உங்கள் கதை முடிந்தது என்று சொல்லி நாட்டு வெடிக்குண்டை அவர்கள்மீது வீசியதாகவும் அவர்கள் தெரிந்துகொண்டதால் நீதிமன்ற சுற்றுசுவரில் பட்டு வெடித்து புகை கிளப்பியதாகவும் அவ்வாறு வெடித்ததில் செல்லதுரை, சாண் என்கிற சாணக்கியன் இருச் சக்கர வாகனத்தில் வந்த வழக்குரைஞர் முருகன்கார் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டதாகவும் சத்தம் கேட்டு நீங்களும் பயந்து ஓடிவிட்டதாகவும் புலனாய்வின்போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi, B.L.,
Additional District&Session Judge,
Salem.